# மனதுக்குள் குட்டிபோடும் மயில் இறகுகள்.!



(எல்லாவற்றையும் தொட்டுச்செல்ல முயலும் ஒரு எளியதொடர்)

- ச.ச.முத்து

## வரலாற்றில் நெருப்பு

உலகத்
தமிழினத்தின்
உயிர் நூலகத்தை
பௌத்த சிங்களம்
வஞ்சகமே
வாழ்வாகிப்
போனோரின்
கருணைபெற்ற
துட்ட
காமினி தலைமையில்
தீவைத்துக்
கரியாக்கி
இன்றுடன்
ஆண்டு
இருபத்தொன்பதாச்சு
சிங்களமும் வஞ்சகமும்
திரும்பி வரமுடியா
பாதை ஒன்றில்
பயணம் செய்கின்றார்
அவரிட்ட
நெருப்பதுவோ
தமிழர் அறிவகத்தே
என்றென்றும்
உயிர்ப்பூ

தொல்லூர் நாகன்
பிரான்சு

இறகுகள் 9:1

## இன்னும் அணைக்க முடியாமல் எரியும் நெருப்பு

(சிங்கள பேரினவாதிகளால் 1981 மே மாதம் 31ம் திகதி எரித்துச் சாம்பலாக்கப்பட்ட யாழ் நூலகத்தின் நினைவாக...)

அன்றைப் பொழுது இப்போது நினைத்தாலும் அந்த நினைவுகளுக்குள் புத்தகங்கள் எரிந்த சாம்பல் மணம்தான் விசிறி அடிக்கின்றது. முழுத்தேசிய இனமும் விக்கித்துநின்ற அந்தநாளில், எரிந்து முடிந்து கரும்புகை பரவியபடிகிடந்த யாழ்நூலகத் தின் காட்சி சிங்கள பேரினவாதம் எமது இனத்துக்கு எதிராக இடையறாது நடாத்திவரும் அழிப்புகளுக்கு ஒரு பெரும் சாட்சியாகும்.

நூலகம் என்பது வெறுமனே ஒரு கட்டிடம் என்பது அல்ல. ஒரு மக்கள் கூட்டத்தின் பாரம்பரி யம், அறிவுதேடல், வாழ்வுமுறை எல்லாம் அந்த நூலகங்களின் கட்டிடங்களுக்குள் உயிரோட்டத் துடன் எப்போதும் அசைந்துகொண்டு இருக்கும். ஒரு சமூகத்தை ஒவ்வொரு தளத்தில் இருந்தும் அடுத்த தளத்துக்கு உந்தித்தள்ளும் வலிமை மிக்கவை இந்த வாசிகசாலைகள். மனிதனின் கண்டுபிடிப்புகளில் `மொழி` என்பது எத்தனை அற்புதமானதோ, அதைப்போலவே மனிதன் அமைத்த அல்லது கட்டிய எல்லா கட்டடங்களை விடவும் நூலகங்களே உயர்வானவை. எந்த ஒரு பிரதியுபகாரமும் கருதாது அறிவையும் ஆற்றலையும் அள்ளி வழங்கும் தாய் அன்புக்கு ஈடானவை நூலகங்கள்.

வெறுமனே ஒரு மாவட்ட அபிவிருத்திசபை தேர்தலின் வன்முறை என்ற குற்றச்செயலுக்குள் இந்த நூலக எரிப்பை நோக்கமுடியாது. தமிழ்மொழி பேசும்மக்கள் அனைவரதும் சுயமாக சிந்திக்கும் உரிமை மீதும், அறிவைத்தேடும் மானுட இயல்புமீதும் எறியப்பட்ட கொள்ளி என்றே நோக்கவேண்டும். ஆற்றல் உள்ள இனமாக மாறுவதற்கான வாய்ப் புகளை இல்லாது செய்துவிட்டால் தொடர்ந்து அடிமைகளாக வைத்திருக்கலாம் என்ற முடிவுகளோ டுதான் ஆக்கிரமிப்பாளர்கள் அறிவின் ஊற்றுக்கண் களை அடைப்பார்கள். இந்த முடிவோடுதான் சிங்களமும் தனது அமைச்சர்களையும் படைவெறி நாய்களையும் அனுப்பி மிகநுணுக்கமான திட்டமிட லுடன் ஒரு தேர்தல் பொழுதில் எங்களின் தேசிய சொத்தை எரித்தழித்தார்கள்.

அந்தநாளின் மக்கள் உணர்வுகள் இன்னும் அலைகளாக மனமெங்கும் பரவிக்கிடக்கின்றது. காலகாலமாக குடி இருந்த வீடு எரிந்து தணலாக கிடப்பதுபொல எட்டத்தில் இருந்தே மக்கள் பார்த்துக் கலங்கினர். தொண்டைக்குள் வார்த்தைகள் சிக்குப் பட்டு வெளிப்படமுடியாமல் ஏதும்கூறத் தோன்றாமல் மௌனமாக ஒரு அறிவுக்கோயிலின் சாம்பல் கலந்துவந்த காற்றை சுவாச்சித்தபடி நின்றனர். இலங்கைத்தீவில் இரண்டு இனங்களும் சேர்ந்து வாழவே இனிமுடியாது என்று தமிழீழ தேசிய இனம் முடிவெடுத்த தருணங்களில் யாழ்நூலகம் எரிக் கப்பட்ட அந்தநாளும் ஒன்று.

**யாழ். நூலக எரிப்பு என்பது ஒரு ஆயுதப்படை வன்முறை என்பதற்கு அப்பால் அதுதான் சிங்களத்தின் மனோபாவத்தின் அடையாளம். ஒரு தேசத்துக்குள்ளேயே அவர்கள் பெரும்பான்மையாகவும் நாங்கள் சிறுபான்மை யாகவும் வாழும் வரை அந்த மனோபாவம் மாறவே மாறாது.**

இன்று அந்த இடத்தில் புதியநூலகம் அதைவிட அழகாக கட்டப்பட்டு இருக்கலாம். அதைவிட நவீன வசதியுடன் அது இயங்கலாம். ஆனால் அன்று அந்த மே 31ம் நாள் 1981ம் ஆண்டில் எங்கள் மூளைக்குள் சொருகப்பட்ட தீக்கொள்ளி இன்னும் சுட்டுக்கொண் டுதான் இருக்கிறது. அடுத்த தலைமுறைக்கு

சிங்கள பேரினவாதிகள் செய்த இந்த காட்டு மிராண்டித்தனம் தெரிந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனத்துடன் எரிப்பின் எச்சங்கள் எதுவும் இல்லாமல் துடைத்தெறிந்துவிட்டு புதிதாக கட்டி எழுப்பி உள்ளார்கள். சுவர்களில் படிந்திருந்த கரிய சாம்பலையும், எரியாமல் எஞ்சிக்கிடந்த கூரை யையும், தீ தின்று துப்பிய புத்தக பக்கங்களையும், ஓலைச்சுவடிகளையும் அகற்றிவிட்டு புதியதாக கட்டடம் கட்டி அதற்கு வர்ணமும்பூசி எல்லாவற் றையும் மறைக்கலாம்.

ஆனால் ஒரு இனத்தின் நெஞ்சில் நெருப்பு சுட்ட அந்த வடு மாறாது. யாழ். நூலக எரிப்பு என்பது ஒரு ஆயுதப்படை வன்முறை என்பதற்கு அப்பால் அதுதான் சிங்களத்தின் மனோ பாவத்தின் அடையாளம். ஒரு தேசத்துக்குள்ளேயே அவர்கள் பெரும் பான்மையாகவும் நாங்கள் சிறுபான்மையாகவும் வாழும்வரை அந்த மனோபாவம் மாறவேமாறாது.

இந்த இடத்தில் இன்னொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். எங்களின் தேசிய அறிவுச்சொத்தான நூலகத்தை எரித்தபொழுதில் எங்கும் கோபமும் சீற்றமுமே தமிழ் மனமெங்கும் நிறைந்திருந்தது. அதற்கு முன்னரே எழுந்துவிட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வீசி எழச் செய்ததில் நூலக எரிப்பும் ஒன்றுதான். பின்வந்த காலத்தில் விடுதலைப் போராட்டம் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியுடன் சிங்கள படைகளுக்கு சமனான பலத்துடன் எழுந்து நின்றது. விடுதலைப் புலிகளால் சிங்கள தேசத்தின் எந்த மூலையிலும் தாக்குதல் நடாத் தக்கூடிய வலு இருந்தது. ஆனாலும் எந்த ஒரு சிங்கள நூலகத்தின் மீதும் வான்குண்டை வீசியும், உயிரம்பை ஏவியும் தீ மூட்டியும் பழிவாங்காமல் போராடிக்காட்டிய எங்கள் தேசப்புதல்வர்களின் அறம் விண்ணளவு உயர்ந்தது. அந்த அறம்தான் என்றாவது நின்று கொல்லும் சிங்களத்தை.



இறகுகள் 9:2

## வாக்குமூலம்

இந்தியாவில் ஆட்சியில் இருந்த வி.பி.சிங் அவர்களின் அரசாங்கம் கவிழ்ந்ததை அடுத்து தேர்தல் பற்றிய எதிர்பார்ப்பு எழுந்தது. மீண்டும் தேர்தல் நடந்தால் ராஜீவ் ஆட்சிக்குவரும் சந்தர்பபங்கள் அதிகமாக தெரிந்தன. பத்மநாபா கொலைக்கு சிலநாட்கள் பின்னர் இந்தியாவின் `சன்டே` பத்திரிகைக்கு ராஜீவ் அளித்தபேட்டி 1990 ஒகஸ்ட் 19ம் திகதி இதழில் வெளியானது.

அதிலிருந்து... `ஈழத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்தியபடைகளுக்கும் 1987 முதல் 1990 ஆரம்பம் வரை நடந்த மோதல்கள் பற்றி நிருபர் கேட்டபோது, ராஜீவ் தந்த புதிலின் ஒருபகுதி – `ராஜீவ்: அது சிறீலங்காவின் ஒற்றுமையையும் இறையாண்மையையும் பாதுகாக்க நடந்த மோதல். அது நமது பிராந்தியத்தில் அந்நியசக்தி நுழைவதை தடுக்க நடந்த மோதல். அது சிறீலங்காவும் இந்தியாவும் சேர்ந்து எடுத்த முடிவு. ஒரு நட்பு நாடு உதவி கேட்கின்றபோது நாம் உதவி செய்யவேண்டாமா ? மாலைதீவுகள் உதவிகோரியபோது, நாம் செய்யாமல், அமெரிக்கா உதவட்டும் என்று விட்டு விடலாமா ? அமெரிக்கா உதவ முன்வராவிட்டால், வேறு யாராவது உதவுவார்கள். நமது பிராந்தியத்தில் நமக்குள்ள பொறுப்பை வெறுமனே தட்டிக்கழித்து விட்டு அதனால் ஏற்படும் வெற்றிடத்தை மற்றவர்கள் நிரப்ப வாய்ப்பு ஏற்படுத்தகூடாது.` என்று சொல்லியுள்ளார்.

ராஜீவ் மீண்டும் பிரதமராக வந்திருந்தால் மீண்டும் படை அனுப்பி இருப்பார். இன்றும் மாறாமல் இருக்கின்ற இந்தியகொள்கை இதுதான். அது சிங்கள பேரினவாதத்தின் ஒற்றை ஆட்சி என்ற கோரப்பற் களுக்குள் ஈழத்தமிழரை அடங்கி வாழவே வலியுறுத்தும்.